**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Proceeture )**
**In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.**

**CC.No. 589/2018**

**Deposition of LW2 Examined as PW3**

**Name : Sekar**
**Husband / Father Name : Thangarsu**
**village :**
**Taluk :**
**Post :**
**Religion :**
**Age : 55/22**

**Solomnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2022**

## முதல் விசாரணை

நான் சேந்தங்குடி, வடபாதி தெருவில் வசித்து விவசாய வேலை செய்துவருகிறேன். 2018 ஆம் ஆண்டு எங்கள் தெருவில் பொங்கல் திருவிழா நடந்தது. அன்று இரவு நான் தூங்கிகொண்டிருந்தபோது பலத்த சத்தம் கேட்டது நான் எழுந்துசென்று போய் பார்த்தேன் அங்கு தமிழ்செல்வன் அருவாளை வைத்திருந்தார் ஏன் நாளும் கிழமையுமா சண்டை போடுகிறர்கள் என்று கேட்டேன் உடனே என்னை அருவாளால் நடு நெற்றியில் வெட்டிவிட்டார். உடனே என்னை மருத்துவசிகிச்சைக்கு மயிலாடுதுறை அரசு மருததுவமனைக்கு அழைத்து சென்றார்கள். எனக்கு நிகா இல்லை பின்னர் என்னை மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனக்கு மண்டையில் தையல் போட்டு ஸ்கேன் செய்தார்கள். திருவாரூர் மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள் நான் நடந்த விபரத்தை சொன்னேன்.

## குறுக்கு விசாரணை

சம்பவம் சம்பந்தமாக நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கவில்லை. அருகில் இருந்தவர்கள்தான் புகார் கொடுத்தார்கள். ஐயப்பன் என்பவர் என் உடன் பிறந்த சகோரர் என்றால் இல்லை. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 6.30 மணியில் இருந்து 07.30 மணி இருக்கும். சம்பவ நடந்த இடத்தை சுற்றிலும் வீடுகள் உள்ளது. சம்பவ நடந்த இடத்தில் தெருவிளக்குகள் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் எந்த தேதி எந்த வருடம் நடந்தது என்றால் தேதி நினைவு இல்லை வருடம் 2018. மயிலாடுதுறை யில் போலிசார் 4 நாட்கள் வந்து விசாரித்தார்கள் எனக்கு நிதானம் இல்லாததல் சென்றுவிட்டார்கள் மீண்டும் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு வந்து போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் தூங்கிகொண்டிருந்தபோது சத்தம் கேட்டுதான் நான் வெளியே வந்தேன் என்றால் சரிதான். எனக்கு எதிரிக்கு ஏதேனும் முன் விரோதம் உண்டா என்றால் இல்லை. விழா நடந்த இடத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததா என்றால் விழா நடந்த இடத்திற்கு நான் போகவில்லை. எதிரி என்னை வெட்டவில்லை என்றாலும் நான் தடுமாறி இரும்பில் விழுந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல எதிரிதான் என்னை வெட்டினார். ஐயப்பனை வெட்டிவிட்டார் என்று நான் ஏதேனும் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் இல்லை.

சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரியின்மீது பொய்யாக நான் குற்றம் சுமத்துகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. எனக்கு மது சாப்பிடும் பழக்கம் இல்லை. போதையில் இருந்தநான் தடுமாறி விழுந்துவிட்டு எதிரியின் மீது பொய்யாக குற்றம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.